16.09.2025

COS. No. 15/2023

**PW.3 – திருஞானசுவாமி**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**

2008-2009 முதல் 2011-2012 வரை ஒப்பந்த முறையில் வேலை செய்தார்கள். மொத்தம் எவ்வளவு மூலப்பொருட்களை பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்திலிருந்து எடுத்துச் சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், அதுபற்றி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எவ்வளவு தொகைக்குரிய மூலப்பொருட்கள் வரவேண்டும் என்று தான் சொல்லியுள்ளேன் என்றாலும், எவ்வளவு மூலப்பொருட்கள் எடுத்துச் சென்றார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதிகள் வேலையை முடித்து தந்தார்கள் என்ற தேதியை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மூலப்பொருட்களை ஒருமுறை வெளியே எடுத்துவருவதற்கு எத்தனை பாஸ் தருவோம் என்றால், ஒவ்வொரு Gate-ற்க்கும் ஒவ்வொரு பாஸ் தருவோம். ஒவ்வொரு Gate பாஸ்-உம் வெவ்வேறு எண்களை உடையது என்றால் சரிதான். வழக்கில் கோரியுள்ள தொகை பிரதிவாதிகள் எந்த ஆண்டு செய்த வேலைக்குரியது என்றால், மூன்று வருட ஒப்பந்தங்களுக்கு சம்பந்தப்பட்டது. பிரதிவாதிகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகள் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தவொரு தொகையும் வாதிக்கு தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தப்படி பிரதிவாதிகள் முறையாக வேலை கொடுத்து முடித்துவிட்டார்கள் என்றாலும், பாக்கி வேலை எதுவும் வைக்கவில்லை என்றாலும், அதனால் எந்தவொரு தொகையும் பிரதிவாதிகள் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி :-**

ஒரு முறை மூலப்பொருட்கள் எடுக்க எத்தனை Gate பாஸ்கள் கொடுப்பீர்கள் என்றால், ஒரு ஸ்டோரிலிருந்து பொருட்கள் எடுத்தால், அந்த ஸ்டோருக்கான Gate

பாஸ் வழங்கப்படும். ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்டோர்களிலிருந்து பொருட்கள் எடுத்தால் ஒவ்வொரு ஸ்டோரில் இருந்தும் எடுத்தப் பொருட்களுக்காக தனித்தனியே Gate பாஸ்கள் வழங்கப்படும்.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.